EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 26

## தொல்காப்பியத்தில் புலம்

***நெறியாளர் முனைவர் ந.தனசேகர்***
*உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை*
*திருவள்ளுவர் அரசுகலைக்கல்லூரி, இராசிபுரம் 637 401..*
***ஆய்வாளர் மு.செந்தாமரை***
*முழுநேரமுனைவர்பட்டஆய்வாளர்*
*தமிழாய்வுத்துறை,*
*திருவள்ளுவர் அரசுகலைக்கல்லூரி, இராசிபுரம் 637 401.*

## ஆய்வுச் சுருக்கம்

ஒத்த கூறு அடிப்படையில் தொகுப்பதும், தொகுத்தவற்றை அதே அடிப்படையில் பகுப்பதுமானபணி, இலக்கண இலக்கியங்கள் தோன்றியகாலம் முதல் நடைபெற்றுவருகின்றது. தமிழ்மொழிக்கு அமைந்த முதன்மையான இலக்கண நூல் தொல்காப்பியம். இந்நூலில் மேற்சொன்ன கூறுகள் பதிவுபெற்றுள்ளன. அதாவது புலம் என்பதற்கான வரையறை, புல அடிப்படையிலான ஆய்வின் தொடக்கம் தொல்காப்பியத்தில் முதல் நூற்பாதொடங்கிஎழுத்ததிகாரம் முழுமைக்கான புல அடிப்படைகளை இக்கட்டுரை ஆய்ந்துள்ளது.

## முன்னுரை

ஒருமொழியின் வளர்ச்சியை எடுத்துரைப்பது அதன் சொற்கள், சொற்களின் பெருக்கமே அதன் பொருளை நுட்பமாக எடுத்துரைக்க இயலும். அதனால்தான் ஒருபொருளுக்குப் பலசொற்கள் இருப்பதும் பலபொருளுக்கு ஒருசொல் இருப்பதும் நிகழ்கிறது. இதை தொல்காப்பியர் உரிச்சொல் என்றார். நிகண்டுநூலார் பொருட் தொகுதி என்றனர். இங்கு தொகுதி என்பதை நாம் புலம்

எனக் கொள்ளலாம். அவ்வடிப்படையில் தொல்காப்பியத்தில் பாகுபடுத்தப்பட்டுள்ள புல அடிப்படைகளை இங்கு காண்போம்.

## சொற்றொகுதி

சொற்கள் பல அடங்கியது சொற்றொகுதியாகும். இதுவே மொழியின் இயக்கத்திற்கு அடிப்படையானது. காலமாற்றத்தினால் சொற்களும் அவைதரும் பொருள்களும் மாறும் இயல்புடையவை. மாற்றங்களை ஏற்றுக்கொண்டு நெகிழ்ந்து கொடுக்கும் மொழியே வாழும் மொழியாகத் திகழும்.

ஒருமொழியின் வளம் என்பது அம்மொழி கொண்டுள்ள சொற்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது. நன்கு வளர்ச்சியடைந்த மொழி துல்லியமான பொருளை உணர்த்தும் சொற்கூறுகளைக் கொண்டிருக்கும். வளர்ச்சியடையாத மொழியில் அவ்வாறான சொற்கள் இருக்கும் எனக் கூற இயலாது.

## புலச்சொற்கள்

ஒருமொழியில் வழங்கும் சொற்களைப் பல்வேறுபுலங்களாகப் பிரிக்கலாம். ஒரு பொதுத்தன்மை அடிப்படையில் அதன் தொடர்புடைய சொற்களைப் புலச்சொற்கள் எனலாம்.

பொருண்மைநிலையில் ஒருபொருள் உணர்த்தும் பலசொற்கள் அடங்கிய தொகுதி அல்லது தொகுப்பு புலச்சொற்கள் எனப்படும். அதாவது ஒரு பொதுத் தன்மை அடிப்படையில் ஒத்த தொடர்புடைய சொற்களைப் புலச்சொற்கள் என்று எடுத்துக்கலாம். எனவே ஒன்றன் கூற்றை உணர்த்திவரும் சொற்கள் அல்லது சொற்றொகுதியைப் புலச்சொற்கள் என்று வரையறுக்கலாம்.

## புலஅடிப்படையின் தோற்றம்

“தமிழ் மொழியிலுள்ள இலக்கண, இலக்கியங்களை நோக்குமிடத்து புல அடிப்படையில் சொற்களைத் தொகுப்பதும், ஆய்வதுமான பணி கி.பி.8ஆம் நூற்றாண்டில் தோற்றம் கொண்டிருக்கலாம்”[1] என்கிறார் இல.அய்யப்பன். சொற்களுக்குப் பொருள் கூறும் மரபு தொல்காப்பியரால் உரியியல், மரபியல் முதலிய இயல்களின் மூலம் தொடங்கி வைக்கப்பட்டது.

பின் இம்மரபுநிகண்டுகளாயின. கி.பி.9ஆம் நூற்றாண்டுமுதல் நிகண்டுகள் படைக்கப்பட்டன. கற்றுத் தேர்ந்த புலவர்கள் கவி இயற்றும் போது ஏற்படும் ஐயங்களையும் சிக்கல்களையும் களையும் வண்ணம் நிகண்டு நூல்கள் எழுதப்பட்டன. இந்நிகண்டுகள் மனனம் செய்வதற்கு ஏதுவாக செய்யுள்

வடிவத்தையே பின்பற்றியுள்ளன. இவை “பலவகைப் பொருட் புலவகைப்பாடு உடையனவாய் உள்ளன.”2 என்கிறார் பெ.மாதையன்.

அவ்வகையில் முதலாவதாக அமைந்த திவாகரம் பன்னிரண்டு தொகுதிகளைக் கொண்டது. “1. தெய்வப் பெயர்த் தொகுதி, 2. மக்கட் பெயர்த் தொகுதி, 3. விலங்கின பெயர்த் தொகுதி, 4. மரப் பெயர்த் தொகுதி, 5. இடப் பெயர்த் தொகுதி, 6. பல்பொருள் பெயர்த் தொகுதி, 7. செயற்கை வடிவம் பெயர்த் தொகுதி, 8. பண்புபற்றிய பெயர்த் தொகுதி, 9. செயல் பற்றிய பெயர்த் தொகுதி, 10. ஒலி பற்றிய பெயர்த் தொகுதி, 11. ஒருசொல் பலபொருள் பெயர்த் தொகுதி, 12. பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி”3 இவை புல அடிப்படையவை என்பது தெரியவருகிறது.

திவாகரநிகண்டுக்குப் பின்வந்த பிங்கலநிகண்டிலும் பொருட் பாகுபாட்டில்,“1. உணவின் வகை, 2. பூணின் வகை, 3.இரத்திணத்தின் வகை, 4. உலோக வகை, 5. ஆடை வகை, 6.பூச்சு வகை, 7. சூட்டு வகை, 8. இயல் வகை, 9. இசை வகை, 10. நாடக வகை, 11. மண்டில வகை என்ற அடிப்படையில் 20 வகை உட்பாகுபாடுகளைக் கொண்டிருப்பதாக பெ.மாதையன் குறிப்பிடுகிறார்”4 இவ்விரண்டு நிகண்டுகளின் அடிப்படையில் பார்க்கும் போது பொருட்புல அடிப்படையில் உருவாக்கப்பட்டவைதாம் நிகண்டுகள் என்பது தெரியவருகிறது.

ஆயினும் சொல்லுக்குப் பொருள் கூறும் மரபைத் தொடங்கிய தொல்காப்பியர் தொல்காப்பியத்தில் பல இடங்களில் புல அடிப்படையைக் கையாண்டுள்ளார். அவற்றை இக்கட்டுரையில் காண்போம்.

## தொல்காப்பியமுதல் நூற்பா

“எழுத்தெனப் படுவ
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃதென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே”5

என்ற நூற்பாவில் எழுத்துக்களின் நெடுங் கணக்குமுறை சொல்லப்பட்டாலும் எழுத்து என்னும் ஒருபுலத்துக்குள் அடங்குவனவாகிய ‘அ’என்னும் எழுத்தில் தொடங்கி ‘ன’என்னும் எழுத்தில் முடியும் முப்பது எழுத்துக்கள் முதல் எழுத்துக்கள். இம்முதல் எழுத்துக்களைச் சார்ந்து வரக்கூடிய எழுத்துக்கள் மூன்று என்கிறார். எனவே முதல் எழுத்துக்களாக வரக்கூடிய முப்பது. அதை சார்ந்துவரும் மூன்று என எழுத்துக்களின் புலத்துக்குள் முப்பத்துமூன்றை எடுத்துரைத்துள்ளார் தொல்காப்பியர்.

முன் நூற்பாவில் முப்பது எழுத்துக்கள் எவை என்பதைச் சுட்டிக்காட்டிய தொல்காப்பியர் சார்ந்து வரக்கூடிய மூன்றைப் பின்வரும் நூற்பாவில் சுட்டுகிறார்.

## உயிரெழுத்து

"அவைதாங்
குற்றியலிகரங் குற்றியலுகரமாய்தமென்ற
முப்பாற் புள்ளியமெழுத்தோ ரன்ன"6

இதில் குற்றியலுகரம் ,குற்றியலிகரம், ஆயுதம் ஆகிய மூன்றும் முதலெழுத்துக்களைச் சார்ந்து வருதலால் சார்புஎழுத்து என்னும் புலத்திற்குள் அடக்கலாம்.

"அவற்றுள்
அஇஉ
எஒவென்னுமப்பாலைந்து
மோரளபிசைக்குங் குற்றெழுத் தென்ப"7

என்னும் நூற்பாவழி அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்து எழுத்துக்களுக்கு ஒருமாத்திரை அளவு ஒலிக்கக்கூடிய குற்றெழுத்து எனக்க குறிப்பிடுகிறார். எனவே ஒருமாத்திரை அளவு ஒலிக்கும் எழுத்துக்கள் குற்றெழுத்து என்னும் புலத்துக்குள் அடங்குகின்றன.

"ஆஈ ஊஏ ஐ
ஓஔ வென்னுமப்பாலேழு
மீரளபிசைக்கும் நெட்டெழுத் தென்ப"8

என்று கூறுவதிலிருந்து இரண்டு மாத்திரை அளவு ஒலிக்கக்கூடிய ஆ,ஈ, ஊ, ஏ, ஐ, ஓ,ஔ என்ற ஏழு எழுத்துக்களும் நெட்டெழுத்து என்கிறார். இவ்வெழு எழுத்துக்களின் மூலம் பிறக்கும் எழுத்துக்கள் நெட்டெழுத்து என்னும் புலத்திற்குள் அடங்குகின்றன.

குறிலும் நெடிலுமாகஅமைந்தபன்னிரண்டுஎழுத்துக்களும் உயிர் எழுத்துக்கள்

"ஔகாரவிறுவாய்ப்
பன்னீரெழுத்துமுயிரென மொழிப"9

என்று உரைக்கிறார் தொல்காப்பியர். எனவே மொழிக்கு உயிர் போன்றகுறில் 5,நெடில் 7 ஆக பன்னிரெண்டும் உயிரெழுத்துகளும் புலத்தில் அடங்கும் எழுத்துக்களாகும்.

## மெய்யெழுத்து

"னகரவிறுவாய்ப்

பதினெண் ணெழுத்துமெய்யென மொழிப"10

என்னும் நூற்பாவில் மெய்யெழுத்துக்கள் பதினெட்டு என்பதைக் குறிப்பிட்டு அதை கீழ்வரும் நூற்பா மூலம் மூன்று புலங்களின் அடக்குகிறார் தொல்காப்பியர்.

"வல்லெழுத் தென்பகசட தபற"11

"மெல்லெழுத் தென்பஙஞன நமன"12

"இடையெழுத் தென்பயரல வழள"13

இதில் வன்மையான ஓசைதரக்கூடிய க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறு எழுத்துக்களும் வல்லினம் என்னும் புலத்துக்குள்ளும் ,மென்மையான ஓசையைத் தரக்கூடிய ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறு எழுத்துக்களும் மெல்லினம் என்னும் புலத்துக்குள்ளும், வல்லினத்திற்கும் மெல்லினத்துக்கும் இடைப்பட்ட ஓசையுடைய ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறும் எழுத்துக்களும் இடையினம் என்னும் புலலத்துக்குள்ளும் அடக்குகிறார் தொல்காப்பியர். மேலும் மெய்யெழுத்துகளில் சுட்டு, வினா முதலான வகைபாடுகளும் புலஅடிப்படையாகக் கொள்ளலாம்.

## எழுத்துவகைசொற்புலம்

எழுத்துக்களின் வகைகளைச் சொன்னதொல்காப்பியர் சொற்களின் வகைகளை,

"ஓரெழுத் தொருமொழியீரெழுத் தொருமொழி

யிரண்புறத் திசைக்குந் தொடர்மொழியுளப்பட

மூன்றேமொழிநிலைதோன்றிய நெறியே"14

என மூன்றாகப் பாகுபடுத்தியுரைக்கிறார். இதில் ஓர் எழுத்துமட்டும் தனித்த நின்றுபொருள் தருவது ஓரெழுத்து ஒருமொழி என்றும், இரண்டு எழுத்துக்கள் சேர்ந்து நின்றுபொருள் தருவது ஈரெழுத்துமொழி என்றும் இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் கூடி வரக்கூடிய சொற்கள் தொடர்மொழி என்று மூவகையில் பாகுபடுத்தியுரைத்துள்ளார். இவற்றை நாம் எழுத்து அடிப்படையிலான சொற்புலம் எனலாம். அதாவது, ஓரெழுத்துச் சொற்புலம் ,ஈரெழுத்துச் சொற்புலம், தொடர்மொழி சொற்புலம் என்று வகைப்படுத்திக் கூறலாம்.

## எழுத்துக்களின் பிறப்புஅடிப்படையில் சொற்புலம்

"உந்திமுதலாமுந்துவளிதோன்றித்

தலையினுமிடற்றினுநெஞ்சினுநிலைஇப்

பல்லுமிதழுநாவு மூக்கு

மண்ணமுமுளப்படவெண்முறைநிலையா
னுறுப்புற் றமையநெறிப்படநாடி
யெல்லாவெழுத்துஞ் சொல்லுங் காலைப்
பிறப்பினாக்கம் வேறுவேறியல
திறம்படத் தெரியுங் காட்சியான"15

உந்தியிலிருந்து (கொப்பூழ்) காற்றானது மேலெந்து வந்து நெஞ்சி, கழுத்து, தலை ஆகிய இடங்களில் பொருந்தி ஒலிஉறுப்புகளான பல், உதடு, நாக்கு, மூக்கு, அன்னம் ஆகியவற்றில் பொருந்தி வேறுவேறு எழுத்துக்களாகப் பிறக்கின்றன என்பது தொல்காப்பியர் கருத்து.

எழுத்துக்கள் பிறப்பதற்குரிய இடமாக நெஞ்சு, கழுத்து, தலை ஆகியவற்றை குறிக்கிறார். உயிரெழுத்துக்கள் கழுத்தையும், மெய்யெழுத்துகளில் வல்லினம் நெஞ்சையும், மெல்லினம் மூக்கையும், இடையினம் கழுத்தையும் இடமாகக் கொண்டவை. இவற்றை மொழியிலாளர்கள் உயிரொலி, வல்லொலி, மெல்லொலி, இடையொலி என்கின்றனர். புல அடிப்படையில் உயிரினப்புலம், வல்லினப் புலம், மெல்லினப் புலம், இடையினப் புலம் என்று பிறக்கிற இடங்களை வைத்து பிரித்துக் கூறலாம்.

## பெயர் வகைகளில் புலம்

"உயர்திணைப் பெயரே அஃறிணைப் பெயர்என்று
ஆயிரண்டுஎன்பபெயர்நிலைச் சுட்டே"16

என்று பெயர்களை உயர்திணைப் பெயர் அஃறிணைப் பெயர் என இரண்டு வகையாகப் பாகுபடுத்தியுள்ளார் தொல்காப்பியர். இவற்றை உயர்திணைப் பெயர்ப்புலம், அஃறிணைப் பெயர்ப்புலம் என இரு புலங்களாகக் கொள்ளலாம்.

## தொகுப்புரை

- புலச் சொற்கள் குறித்த காலம், நிகண்டின் பகுப்புமுறை ஆகியவற்றைப் பற்றி இவ்வாய்வின் வழி தெரியவருகிறது.
- அகரம் முதல் னகரம் வரை ஆகிய முப்பது எழுத்துக்களும், அதனோடு சார்ந்துவரும் சார்பெழுத்துக்கள் மூன்றும், புலத்திற்குரிய சொற்கள் முப்பத்துமூன்று என்று கூறலாம்.
- உயிரெழுத்துக்களில் அ, இ, உ, எ, ஒ என ஐந்து குற்றெழுத்துக்களும், ஆ,ஈ, ஊ, ஏ, ஐ, ஓ,ஔஎன ஏழு நெட்டெழுத்துக்களும் புலத்திற்குள் அடங்கும் என்று ஆராய்ந்து அறிய முடிகின்றது.

- மெய்யெழுத்துக்கள் பதினெட்டு, மூன்றுமொழிநிலை, எழுத்துக்கள் பிறப்பிடம், பெயர்நிலையில் வரும் உயர்திணைப் அஃறிணைப் பெயர்கள் ஆகியவற்றையும் புலத்திற்குள் வைக்கலாம் என்று இவ்வாய்வின் மூலம் அறிய முடிகின்றது.

## முடிவுரை

சொற்களைத் தொகுப்பதும், ஆய்வதுமான பணி நிகண்டுகளின் மூலம் தோற்றம் கொண்டாலும், பொருள் கூறும் மரபு தொல்காப்பியரால் தொடங்கிவைக்கப்பட்டது. அதுபோல ஒன்றன் பொருள் கூறு அடிப்படையில் (அதாவதுபுலஅடிப்படையில் வகைப்படுத்திபிரித்தும், தொகுத்தும் சொல்லும் பணி தொல்காப்பியத்திலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கு எழுத்ததிகாரம் சிறந்த சான்றாகத் திகழ்கிறது என்பது தெரியவருகிறது.

## அடிக்குறிப்புகள்

1. இல.அய்யப்பன், எட்டுத்தொகைப் புற இலக்கியங்களில் புலச்சொற்கள், தொகுப்பு ஆய்வும், முனைவர்பட்ட ஆய்வேடு, பெரியார் பல்கலைக்கழகம்,சேலம்-11, ப.13.
2. பெ.மாதையன்,அகராதியியல், ப.41
3. மேலது. ப.43
4. மேலது. பக்.46-47
5. தொல்காப்பியம், நூ.1.
6. மேலது. நூ.2.
7. மேலது. நூ.3.
8. மேலது. நூ.4.
9. மேலது. நூ.8.
10. மேலது. நூ.9.
11. மேலது. நூ.19.
12. மேலது. நூ.20.
13. மேலது. நூ.21.
14. மேலது. நூ.45.
15. மேலது. நூ.83.
16. மேலது. நூ.118.

.